பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் உள்ள 5 மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் துவக்கப்படுவதற்கான திட்டம் செயற் குறிப்பு அரசிடம் இருக்கிறது. ஆகவே இன்டென்சிவ் கேர் யூனிட் என்று சொல்லப்படுகிற இவைகளைத் துவக்கி விட்டாலே பெரும்பாலான பகுதிகளில் இதுபோன்ற தீவிர சிகிச்சைப் பிரிவுகளும் பணியில் அமர்த்தப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினருடைய கருத்து அரசினுடைய நிதி நிலைக்கேற்ப அவ்வப்போது படிப்படியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, இது இருதய சிகிச்சைப் பிரிவு என்பது ஒன்று. இன்டென்சிவ் கரானரிகேர். இன்னொன்று இன்டென்சிவ் மெடிக்கல் கேர். உதாரணமாக கிராமப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் பாலிடால் போன்ற விஷத்தை அருந்திவிட்டு அல்லது பாம்புக் கடியினால் விஷத்தினால் பாதிக்கப்பட்டு வருபவர்களுக்கு அவசரச் சிகிச்சை அவசியமாகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் அப்படிப்பட்ட கிராமப் புறத்தில் நடக்கக்கூடிய நிலைமை இருப்பதால் இதற்காக தனிப் பிரிவு ஒன்று அமைப்பதற்கு அரசு முன்வருமா? இன்டென்சிவ் மெடிக்கல் கேர்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொன்னேன். இன்டென்சிவ் மெடிக்கல் கேர் யூனிட் என்று இருப்பதற்குப் பதிலாகத்தான் இப்போது ஐ.சி.சி இன்டென்சிவ் கார்டியாலஜிலே அதை உருவாக்குவதற்கு மாவட்ட மருத்துவ மனைகளுக்கு அனுமதி வழங்கி இருக்கிறார் என்று குறிப்பிட்டேன். அவசர சிகிச்சைப் பிரிவு என்ற எமர்ஜென்சி என்று சொல்லப்படுகின்ற பிரிவுகள் பல்வேறு மருத்துவமனைகளிலே இருக்கின்றன. அவைகளிலேயே நீங்கள் குறிப்பிட்ட வியாதிகளுக்கான சிகிச்சைகள் எல்லாம் அளிக்கப்படுகின்ற காரணத்தினால் இன்டென்சிவ் மெடிக்கல் கேர் யூனிட் என்பது இப்போது நிதிநிலைக்கேற்ப அமைக்க முடியாத ஒரு சூழ்நிலையில் அரசு இருக்கிறது.

9-55 மணி

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பெரியகுளம் அரசு மருத்துவமனை.

* 6256 திரு. எல். மூக்கையா:
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்; கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பராரா;

(அ) பெரியகுளம் அரசு மருத்துவமனை, மாவட்ட அரசு மருத்துவமனையாக மாற்றியமைக்கப்பட்டும், மாவட்ட மருத்துவ மனைக்குரிய வசதிகள் அங்கு இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வசதிகள் செய்து தரப்படும்

1990 மே 10]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேவைகளின் அடிப்படையில், படிப்படியாக அரசின் நிதி நிலைகளுக்கேற்ப மேம்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. எல். மூக்கையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் தாலுக்கா மருத்துவமனை மாவட்ட மருத்துவமனையாக மாற்றப்பட்டு 3 ஆண்டுகள் ஆகிறது. ஆனால் அந்த மாவட்ட மருத்துவமனைக்குரிய வசதிகள் இன்னும் செய்து தரப்படவில்லை. 2,500க்கு மேற்பட்ட நோயாளிகள் தினம் வெளி நோயாளிகளாக வந்து போகிறார்கள். இவர்களுக்கு தனித் தனி வெளி நோயாளிகள் சிகிச்சை பிரிவு இல்லை. உள் நோயாளிகள் படுக்கை போதுமானதாக இல்லை. சிறப்பு பிரிவுகள், அறுவை சிகிச்சை ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் கூட இல்லை, தனித் தனி சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் இல்லை. சிறப்பு சிகிச்சை நிபுணர்கள் இல்லை, பெண் டாக்டர்கள் கூட மாவட்ட மருத்துவமனையாக இருந்தும் 2 பேர் மட்டுமே இருக்கிறார்கள். ஒருவர் பிரசவத்திற்கும் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மருத்துவமனை இருக்கிறதா? (சிரிப்பு)

திரு. எல். மூக்கையா: ஆகவே, இந்த வசதிகளை எல்லாம் அரசு எப்போது செய்து தரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தலை நகரத்திலே படிப்படியாக இது போன்ற வசதிகளை செய்து தர முடியும். இப்போது புதிய நிர்வாக அலுவலகக் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு 2.10.89 முதல் அது செயல்பட்டுக்கொண்டு வருகிறது. 60 படுக்கைகளாக இயங்கிக்கொண்டு இருந்த அந்த மருத்துவமனையில் 48 படுக்கைகள் புதிதாக கட்டப்பட்டு இயங்கி வருகிறது. இதைத் தவிர குடும்ப நலத் திட்டத்தின் கீழ் பேறு காலத்திற்கு பின் கவனிக்க வேண்டிய சிகிச்சைக்காக 6 படுக்கைகள் கூடிய பிரிவு கட்டப்பட்டு உபயோகத்தில் இருக்கிறது. 1990–91 ஆம் ஆண்டு, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 75 கிலோ வாட் மின்னாக்கி, ஜெனரேட்டர் ஒன்று கொடுக்க உத்தரவிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, படிப்படியாக அதை மாவட்ட மருத்துவ மனையாக முழுமையாக உருவாக்க அரசு முயற்சிகள் மேற்கொள்ளும். ஆகவே, மேலும் மருத்துவ அலுவலர்களுக்கு குடியிருப்பு, நவீன சமையல் அறை கட்டிடம், 12 படுக்கைகள் கொண்ட காச நோய் கட்டுதல், முன்னாள் ராணுவத்திற்கு 12 படுக்கைகள்

கட்டுதல், சலவைக் கூடம், மருந்துகள் பாதுகாப்பாக, மருத்துவ கருவிகள் பாதுகாப்பாக இருக்க தனி அறை. 6 வண்டிகள் நிறுத்த கெட்டில் கட்டுவது போன்ற பல்வேறு குறிப்புகள் அங்கே இருந்து பெறப்பட்டு இருக்கின்றன. இருந்தாலும் அரசினுடைய நிதிநிலை பற்றாக்குறை காரணமாக இவைகள் எல்லாம் உடனடியாக செய்ய முடியாது. அரசு அவ்வப்போது நிதிநிலைக்கு ஏற்ப படிப்படியாக இவைகளைச் செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆழ்துளைக் கருவிகளைப் பராமரித்துப் பழுதுபார்க்கும் பணிமனை.

*6474 திருமதி பாப்பா உமாநாத்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சியில் உள்ள ஆழ்துளை கருவிகளை பராமரித்து பழுதுபார்க்கும் பணிமனை, தொழிற்கூட தகராறு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தும் அச்சட்டம் அமலாக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அச்சட்டத்தை அமாலாக்கி, பணி நிரந்தரம், வருடாந்திர ஊதிய உயர்வு, இ. எஸ், ஐ. சலுகை அனுமதித்தல் போன்றவற்றை நடைமுறைப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்சியில் உள்ள ஆழ்துளைக் கருவிகளைப் பராமரித்து பழுது பார்க்கும் பணிமனை, தொழிற்கூடத் தகராறுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலை சட்டத்தின்கீழ் இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சதர்ன் ரயில்வே மஸ்தூர் யூனியன்.

* 5274 திரு. பொன். விஜயராகவன்:

மாண்புமிகு செய்தி பற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சதர்ன் ரயில்வே மஸ்தூர் யூனியன் 1926 ஆம் ஆண்டு தொழிற்சங்கச் சட்டத்திற்கு முரணாக நடப்பதாக புகார் அரசுக்கு வந்துள்ளதா?